# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.02.06 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையம் (கூட்டிணைத்தல் )

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாமர சம்பத் தசனாயக அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 72.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

# சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையம் (கூட்டிணைத்தல் )

## சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

இந்நிலையம் “சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட விதிகளுக்கு இணங்க, அதனது குறிக்கோள்களை வினைத்திறனாக கொண்டு நடாத்தும் கருமங்கள் தொடர்பாக இதுகாலவரை இலங்கையில் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அந் நிலையமானது எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக் காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் கூட்டிணைக்கப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம் 2026 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தை கூட்டிணைத்தல்

**2**. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “நிலையம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மஹா விலச்சிய சிறுவர்களுக்கான கல்வி நிலையத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு இதன் பின்னர் உறுப்பினர் களாக சேர்த்துக்கொள்ளப்படுவர்கள் (இதகைத்துப்பின்னர் “கூட்டிணைக்கப்பட்ட குழு” எனக் குறிப்பீடு செய்யப்

படும்) மஹாவிலச்சிய சிறுவர்களுக்கான கல்வி நிலையம்" என்னும் பெயரின் கீழும். மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டுத்தாபனமாக இருத்தலும் வேண்டு மென்பதோடு அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுதத்துவமும், அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் நோக்கத்துக்காகவும் வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அது தொடர்பாக ஏற்புடையதாதல் வேண்டும். இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதனுடன் தொடர்புடையதாயும் இருத்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் குறிக்கோள்கள்

**3.** (1) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவை அமைத்துரு வாக்கப்படுவதற்கான பொதுவான குறிக்கோள்களாவன:-

(அ) குறிக்கோள்கள் மற்றும் எதிர்கால தொழில் வாய்ப்புக்களுக்கு இளைஞர் யுவதிகளை மிகவும் பொருத்தமான வகையில் தயார் செய்வதற்கு கற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பேணி நடாத்துதல்;

(ஆ) தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த சேவை களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தை நிறுவுதல்;

(இ) பின்தங்கிய பகுதிகளிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்க ஏற்பாடு செய்தல் மற்றும் அல்லது ஏற்பாடு செய்தல்;

(ஈ) திறன்கள் மற்றும் கற்றலை மேம்படுத்த காலத்திற்குக் காலம் தேவைப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் அதன் பொதுக் குறிக்கோள்கள் இனம், சாதி, மதம், மொழி, பால்நிலை, அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் அல்லது அத்தகைய வேறு ஏதுவின் அடிப்படையில் ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனை கூட்டிணைக்கப்பட்ட குழு வழிவகை செய்தல் வேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் கீழ் அல்லது திணைக் களத்தின் பணிகள் மற்றும் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் குறிக் கோள்களுக்கு இடையேமுரண் பாடுகள் ஏற்படாமையை உறுதிப்படுத்தல்.

**4**. அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சு அல்லது திணைக்களத்தினால் ஒருங்கே நிறைவேற்றப்படுகின்ற ஏதேனும் பணிக்கும் கூட்டிணைக் கப்பட்ட குழு பணிக்கும் இடையிலான ஏதேனும் முரண்பாட்டை உருவாக்காத வகையில் மற்றும் இணங்குகின்ற அல்லது தொடர்புபடுகின்ற சட்டத்தின் கீழ் தேவையான அனுமதியின் கீழ் அல்லது அதற்கு இணங்க கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழு அலுவல்களை முகாமை செய்தல்

**5**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகளின் முகாமை மற்றும் நிருவாகம் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட

விதிகளினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான பதவிதாங்குநர்களின் அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்ட (இதனகத்துப் பினனர் “சபை” எனக்குறிப்பீடு செய்யப்படும்) நிருவாக சபையொன்றினால் அமுல் படுத்தப்படுதல் வேண்டும்

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பணிப்பாளர் குழு சபையில் கூட்டிணைக்கப்பட்ட பதவிவகிக்கின்ற உறுப்பினர்களினால் (ஆ) பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைவாக, பந்தி (ஈ) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் குறிப்பிட்டுள்ள பிரகாரம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபை நியமிக்கப்பட்டுள்ள அல்லது தெரிவு செய்யப்படும் திகதி வரை, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால சபை யொன்றாக பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) 7ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக கூட்டிணைக்கப்பட்ட குழு இடைக்கால நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்குவதற்கு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால சபைக்கு அதிகாரம் இருக்குமாக.

(இ) ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் இடைக்கால சபையின் ஏதேனும் தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும்: மற்றும்

(ஈ) இச்சட்டம் அமுலுக்கு வரும் தேதியிலிருந்து ஓராண்டிற்குள் கூட்டிணைக்கப்பட்ட நியமிக்கப்படுதல் வேண்டும். குழுவின் முதலாவது சபை வேண்டும் அல்லது தேர்ந்தெடுக் கப்படுதல்.

(3) (அ) போசகர்கள் மதியுரைஞர்களும் உட்பட சபையின் பதவிதாங்குநர்கள் ஒவ்வொருவரும், மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவி தாங்குனர், போசகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்றாண்டுகள் காலப்பகுதி கழிந்த பின்னர் மீள் நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகமையுடை யராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநர் ஒருவரின் இறப்பு, பதவி விலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகிய காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், கூட்டுத்தாபனத்தின் சபையினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(4) இந்த சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு காலத்திற்குக் காலம், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி -

(அ) உறுப்பாண்மை தொடர்பாக பொருத்தமான நபரொருவரை ஆட்ச்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான பிறமாணங்கள் பற்றி;

(ஆ) உறுப்பினர்களின் வெவ்வேறு வகுப்புகள், பிரிவுகளுக்கு (கௌரவ உறுப்பினர்கள் உள்ளிட்ட) ஒதுக்குதல் தொடர்பாக;

(இ) உறுப்பினர்களின் வாக்களித்தல் தொடர்பில் அதற்கான உரிமைகள் உள்ளடங்கலாக உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக; மற்றும்

(ஈ) உறுப்பாண்மை முடிவடையும் நிலைமைகள் முடிவடைவது எவ்வாறு என்பது தொடர்பாக தீர்மானமெடுத்தல் வேண்டும்.

**5**. பணிப்பாளர் சபையின் எந்த உறுப்பினரும் கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எந்தவொரு அலுவலகத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற நிலையத்தின் ஊடாக சம்பளம் அல்லது பிற நிதி ரீதியான நலன்களை நிலையம் சார்பாக மேற்கொள்ளப்பட்ட செலவீனங்களை மீளளிப்புச் செய்தல் தவிர பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவர்களுக்கு வழங்குகின்ற எந்தவொரு பதவிக்கும் நியமித்தல் அல்லது தெரிவு செய்தல் மேற்கொள்ளப் படுதலாகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அதிகாரங்கள்

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள் அல்லது அவற்றில் ஏதேனுமொரு குறிக்கோளை அல்லது சில குறிக்கோளை மேம்படுத்துதல் அல்லது அடைந்துகொள்ளல் தொடர்பாக கீழ் குறிப்பிட்ட தேவையான அல்லது பொருத்தமான சகல செயற்பாடுகள் மற்றும் கருமங்களை மேற்கொள்ளும், நிறைவேற்றும் மற்றும் செயற்படுத்தும் அதிகாரம் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு இருக்குமாக :-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிகள் தொடர்பாக தேவைப்படக் கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், வாடகைக்கு எடுக்கவும். நிர்மாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும் வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழு வின்

குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் சபையினால் உசிதமானதெனக் கருதக் கூடியவாறு அவை தொடர்பாக கருமமாற்றுதல் அல்லது அவற்றை கையுதிர்த்தல்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக் கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங் களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கை களையும் கூட்டுத்தாபனம் அதன் சார்பில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினூடாகவாயினுஞ்சரி அல்லது முகவரினூடாகவாயினுஞ்சரி செய்து கொள் வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(இ) பிணைப் பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப் பொறுப்புக்களின்றியோ நிதிகளை கடனுக்குப் பெறல் அல்லது சேகரித்தல் மற்றும் பணமாக அல்லது பொருட்களாக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து நன்கொடைகள், பரிசில்கள் அல்லது கொடை களைப் பெற்றுக் கொள்ளல்:

எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்படும் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவுக்கு வழங்கப்படுகின்ற எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், பரிசில்கள், நன்கொடைகள் தொடர்பிலும் சபையினால் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கொடுக்கல்வாங்கல் செய்யத்தக்க சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கொடுக்கல்வாங்கல் செய்தல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் தொழிற்படுத்துதல், பேணுதல் மற்றும் மூடிவிடுவதற்கும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங் களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள் களை மேம்படுத்தும் நோக்கத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக் கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பு அல்லது ஏதேனும் நிலையான அல்லது தனிப்பட்ட ஆதனம் என்பவற்றை பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழு அலுவலர்களையும் ஏனைய ஊழியர்களையும் நியமித்தலும். தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப்

பிரயோகித்தலும் மற்றும் கூட்டுத்தாபனம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், மற்றும் கொடுப்பனவுகளை அவர்களுக்குச் செலுத்துதலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள் களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்கு செய்தலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள் களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங் களுடன் தொடர்புகளைப் பேணுதலும் ஒருங்கிணைப்புச் செய்தலும;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங் களுக்காக இலங்கையில் வசிக்கின்ற ஆளணியினருக்கு பயிற்சியளித்தல்; அத்துடன்

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள் களை எய்துவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப் பட்டதான எல்லா காரியங்களையும் செய்தல்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்

7.(1) கூட்டிணைக்கப்பட்ட குழு ஏதேனும் பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர் களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்கினால் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாத விதிகளை கீழ்க் குறிப்பிட்ட விடயங்களுக்காக, காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

**சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையம் (கூட்டிணைத்தல் )**

(அ) உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள்;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள் மற்றும் ஏனைய முகவர்கள் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழு மற்றும் சபையின் கூட்டங்களைக் கூட்டுவதற்காகவும் அதனை நடாத்துவதற்காகவும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) சபையின் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் பற்றிய

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனங்களின் நிர்வாகமும் முகாமையும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களை ஒத்த நோக்கங்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனான தொடர்புகளை பேணுவதல் மற்றும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய செயன் முறை பற்றிய நடபடிமுறைகள்;

(ஏ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் அலுவல்களை முகாமை செய்தலும் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டமொன்றில் அதே போன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப் படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்:

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதில் குறிப்பிட்ட திகதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) 4 ஆம் பிரிவின் கீழ் நீக்கப்பட்டதாக கருதப்படும் ஏதேனும் விதி அவ்வாறு நீக்கப்பட்டதாக கருதப்படும் திகதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்:

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

**8**. உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் ஏனைய தேவையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பொன்று சபையினால் பேணப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்

**9.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிரிவு 6 (இ) இன் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு மற்றும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணங்கள், கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப்பணங்களும் சபையின் அங்கீகரிகப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்கில் செலவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள் அரசியலமைப்பின் 154 வது பிரிவின்படி கணக்காய்வாளர் நாயகத்தினால் அல்லது கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்டு சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது.

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அங்கத்தவர் ஒருவர் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறே தேனும் நிறுவனத்தின் உறுப்பினராக உள்ளவரும் கணக்காளரொருவராக தொழிலில் ஈடுபடுவதற்கு அத்தகைய நிறுவகத்தின் சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ள வருமான தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் கம்பனியொன்றில் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொரு வரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக அத்தகைய நிறுவகத்தின் சபையினால் வழங்கப் பட்ட சான்றிதழொன்றைக் கொண்ட அங்கத்தவர் களை உள்ளடக்கிய அவ்வாறான கணக்காளர் கம்பனி என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11**.(1) சபையினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு நிதியாண்டுக்குமான செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வாளர் தகைமைபெற்ற தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாள ரொருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின்

ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கு அறிக்கையொன்று மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்படும் சகல ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் விபரங்கள் மற்றும் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

நிலையத்தினால் செலுத்த வேண்டிய கடன்கள் நிலையத்தினால் அறவிடப்பட வேண்டிய கடன்கள்

**12**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், பங்களிப்புத் தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருப் பதற்கும்

**13**. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம், ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு விதமாக அதற்கு உரித்தாக வரக் கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும் 7 ஆம் பிரிவின் கீம் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும் இச்சட்டத்தின் பணிகளுக்காக கூட்டுத்தாபனத்தினால் அவற்றை விற்க, ஈடுவைக்க. குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது

வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான முழுத் தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்

**14**. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாம், மிகையூதியம் அல்லது இலாபம் அல்லது வேறுவகையில் எவ்வாறிருப்பினும் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது. எனினும், நல்லெண்ணத்துடன் நியாயமாக மற்றும் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலரொருவருக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு உண்மையாக வழங்கப்பட்டுள்ள ஏதேனும் சேவை தொடர்பாக சம்பளமொன்றை வழங்குதல் இத்தால் தடுக்கப்படுதலாகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாசனத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனி வேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, முடிபு செய்யப்படக் கூடியவாறான, சபையினால் பணிப்பாளர் சபையின் பதலிதாங்குநரொருவரின கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக் கின்ற ஆதனம்

**16**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு, கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும்

எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் இடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்கள் இடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, எந்தத் தோதான நிறுவனம், கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்படுவதற்கு முன்பாக, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களினால் சபையின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) இத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களை தீர்மானிக்கும்போது உட்பிரிவு (1) இற்கு இணங்க செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் துணைப்பிரிவு (2) இன் பிரகாரம் அங்கத்தவர்களினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் நன்மையான நோக்கத்திற்கு அவ்வாறு எஞ்சியிருக்கின்ற ஆதனங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளை பேணல்

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் அல்லது அரச சபையின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளை இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதுவும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது